2026 பிப்ரவரி மாதம் 16– ஆம் தேதி திங்கட்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

எம் .சி .ஓ .பி. நெம்பர் : 134/2023

2025–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16– ஆம் தேதி திங்கட்கிழமை மனுதாரர் தரப்பு சாட்சியாகிய PW3 நபரின் வாக்கு மூலம்

(1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.டீ.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW3 – மீனாட்சி சுந்தரம் |
| தந்தை பெயர்: | கனியப்பன் |
| ஊர்: | போடிநாயக்கனூர் |
| வட்டம்: | போடிநாயக்கனூர் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | விவசாயம் |
| வயது : | 72 |

தேதி : 16.02.2026.

முதல் விசாரணை: –

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பு 3வது சாட்சியாவேன். மனு விபரங்கள் குறித்து நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை என் சாட்சியமாக ஏற்க வேண்டுகின்றேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அவற்றை மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக ஏற்க வேண்டுகிறேன்.

| | | | |
|---|---|---|---|
| 1. | எனது ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). | **ம.சா.ஆ.15** | ஒளிப்பதிவு நகல் |

மனுதாரர் மனுவில் கோரியவாறு மனுப்படி உத்தரவாக வேண்டி பிரார்த்திக்கிறேன்.

**<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>:–**

1. செந்தில்பிரபு எனது உறவினர் என்றால் இல்லை, தெரிந்தவர். அவரை எத்தனை வருடங்களாக எனக்கு தெரியும் என்றால் 5 வருடங்களாக எனக்கு தெரியும். அவரது தாத்தாவை பலவருடங்களாக தெரியும். சம்பவ சமயத்தில் நான் எனது இருச்சக்கர வாகனத்தில் எந்த திசையிலிருந்து எந்த திசையை நோக்கி சென்றேன் என்றால் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி போடியிலிருந்து முந்தல் நோக்கி சென்றுக்கொண்டிருந்தேன். நிரூபண வாக்குமூலத்தில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்றேன் என்று குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரிதான். எனக்கு முன்னர் செந்தில்பிரபு எவ்வளவு தூரத்தில் சென்றுக்கொண்டிருந்தார் என்றால் 20 அடி தூரத்தில் சென்றுக்கொண்டிருந்தார். அந்த 20 அடி தூரத்திற்கு முன்பு இன்னொருவர் இருச்சக்கர வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்தார் என்றால் சரிதான்.

2. நான் இருச்சக்கர வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்தப்போது கேரளா பேருந்து செந்தில்பிரபு சென்ற இருச்சக்கர வாகனத்தில் மோதிவிட்டது என்றால் சரிதான். மேற்படி சம்பவம் நடைபெறும்போது எனக்கு முன்னர் சென்றுக்கொண்டிருந்த இருச்சக்கர வாகனத்தில் பயணித்த நபருக்கும் சம்பவம் தெரியும் என்றால் சரிதான். அவரின் பெயர் மருதுமுத்து செட்டியார் மகன் சங்கர் ஆகும். நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தில் எனக்கு முன்னர் சங்கர் இருச்சக்கர வாகனத்தில் பயணித்தார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். கேரளா பேருந்தில் நான் பயணிக்கவில்லை என்றால் சரிதான். கேரளா

பேருந்தின் ஓட்டுநர் எப்படி ஓட்டிவந்தார் என்று எனக்கு தெரியாது சரியல்ல, அவர் வேகமாக ஓட்டிவந்தார். அவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாக பேருந்தை ஓட்டிவந்ததாக நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளது எதன் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் எதிர்ப்புறத்தில் இருச்சக்கர வாகனத்தில் சென்றப்போது பார்த்தேன்.

3. சம்பவம் குறித்து நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை, நான் காவல்நிலையம் செல்லவில்லை. காவல்நிலையத்தில் என்னை விசாரித்தார்களா என்றால் பிண அறையின் முன்பு நான் இருந்தபோது என்னை விசாரித்தார்கள். அதன்பின்பு என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சங்கர் காவல்நிலையத்திற்கு சென்றாரா என்றால் எனக்கு தெரியாது. நான் சொல்வதுபோல் விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், செந்தில்பிரபு எனக்கு வேண்டிய நபர் என்பதால் அவருக்கு ஆதரவாக நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கேரளா பேருந்து ஓட்டுநர் அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும் வந்ததாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 16.02.2026 அன்று திங்கட்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI Digitally signed by G SREE DEVI Date: 2026.02.16 16:26:26 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
16.02.2026